# HDFC BANK

நான்கு தசாப்தங்களாக பல்வேறு நிதித் தீர்வுகள் ஊடாக இலங்கை மக்களின் வீட்டு கனவை நிறைவேற்றுவதோடு வர்த்தக சமூகத்தினருக்கு நிதி உதவிகளை அளித்து நாட்டின் நலனுக்காக தம்மை அர்ப்பணித்துள்ள வங்கியுடன் உங்களின் வங்கியியல் தொழிலை உயர் நிலைக்கு கொண்டு செல்வதற்கான அரியதொரு வாய்ப்பு கிட்டியுள்ளது.

HDFC வங்கியில் கீழ் காணும் பதவிகளுக்கு திறமையான, செயல்திறன் மிக்க சாதகமான நோக்கை கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தரவுக் கட்டமைப்பு நிர்வாகம் (02 வெற்றிடங்கள்)**
**DATA BASE ADMINISTRATOR (02 VACANCIES)**

**பிரதான பொறுப்புகள்**

- அட்டவணை வெளி, அட்டவணைகள் மற்றும் சுட்டிகளை உருவாக்குதல், சலுகைகள் உருவாக்கமும் பிரவேச ஆக்கமும்.
- Oracle Data Guard இன் போலிகளை மேற்பார்வை செய்தல்
- தரவுக் கட்டமைப்பு உருவாக்கம் மற்றும் வரும் கோரிக்கைகளுக்கமைய அவற்றை பரிசோதித்தல்
- DB பெச் மற்றும் பிரதிகளை இடல்
- RMAN மற்றும் EXPDP ஆகியவற்றின் அன்றாட காப்புப்பிரதிகள் முழுமையானதை உறுதிப்படுத்தல்
- DBMS அட்டவணை பணிகள் மேற்பார்வை
- சுட்டிகள் மீள் உருவாக்கமும் புள்ளிவிபரங்களை சேகரித்தலும்
- Oracle Tuning Advisor, AWR மற்றும் ADDM பாவனையின் மூலம் செயலாற்றுகையை செம்மையாக்கல்
- EM கொன்சோல் கண்காணிப்பு
- தரவுக் குழும நிர்வாக பணியை தானியங்கியாக்குவதற்கு லீனக்ஸ் ஷெல் பிரதிகளை ஆக்குதல்
- பக்கேஜ் மற்றும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நடவடிக்கைமுறைகளை முறைமையாக்குவதற்கு தேவையான PL/SQL அறிவு.
- தரவுக் குழுமங்களை அவதானித்தல்
- Oracle Data Guard மாற்றங்களும் Snapchat மாதிரி
- HDFC வங்கியின் தரவுக் குழுமத்தை மேம்படுத்தல், செயற்படுத்தல், பராமரித்தல் மற்றும் ஒட்டுமொத்த தரவுக் களஞ்சியத்தின் தொடர் இயக்கம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உதவுதல்

**தேவையான தகைமைகள்**

- 04 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் துறை சார்ந்த பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
  அல்லது
- Oracle DBA OCA தொழில் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் குறைந்த பட்சம் 05 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும் அல்லது
- தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் 10 ஆண்டு அனுபவத்தை கொண்டிருத்தல் மற்றும் Oracle DBA தொடர்பான அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

**பின்வரும் Oracle தரவுக் கட்டமைப்பு முகாமைத்துவ ஆற்றல் இருத்தல் வேண்டும்.**

- காப்புபிரதி மற்றும்
- வளங்கள் முகாமைத்துவம்
- செயலாற்றுகை செம்மையாக்கம் மற்றும் கண்காணிப்பு
- Oracle பயன்பாடுகள் மற்றும் சாதனப் பாயன்பாடு
- பாதுகாப்பு முகாமைத்துவம்
- தரவுகளின் தொடர் இயக்க முகாமைத்துவம்

- MS SQL தொடர்பான அறிவு.
- RAC, ASM, RMAN மற்றும் Oracle WebLogic தொடர்பான அறிவு
- உள்வாரியாக காணப்படும் தொழிற்பாட்டு கட்டமைப்பு மற்றும் பௌதீக திட்டங்கள் தொடர்பான முறையான புரிதல் இருத்தல் வேண்டும்.
- செயற்படுத்தப்பட்டுள்ள கட்டமைப்புகள் தொடர்பான அறிவு இருத்தல் வேண்டும்.
- தரவு முகாமைத்துவம் தொடர்பான அறிவு இருத்தல் வேண்டும்.

**வயதெல்லை** – 45 **வயதிற்கு கீழே விரும்பத்தக்கது**.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிக்கு கவர்ச்சிகரமான ஊதியங்களும் கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதோடு பொருத்தமான தரத்தில் நிரந்தர பதவியில் அல்லது ஊதியங்கள் சந்தை மதிப்பின் அடிப்படையில் கருத்தில் கொள்ளப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் பதவிக்கு அமர்த்தப்படுவர்.

## உதவிப் பொறியியலாளர் [தகவல் தொழில்நுட்பம்]
## IT SUPPORT ENGINEER

**பிரதான பொறுப்புகள்**

- ஆராய்ச்சி செய்தல், பிரச்சனைகளை அடையாளங் காணுதல், குறைபாடுகளை தீர்த்தல் மற்றும் சீராகவும் காலோசிதமான முறையிலும் வாடிக்கையாளர் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்குதல்
- பல்வேறு வகையான கட்டமைப்புகள், மென்பொருள் மற்றும் வன்பொருள்களுடன் செயற்படுதல்
- பொருத்தமான உள்ளக திணைக்களங்களுக்கு தீர்க்கப்படாத பிரச்சனைகளை தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கைமுறைகளை பின்பற்றுதல்
- உள்ளீடுகள் விற்பனையாளர்களுடன் நெருக்கமாக செயலாற்றுதல்.

- குறுகிய காலப்பகுதியில் பிரச்சனைகளை தீர்த்தல்
- அதிகபட்ச ஒத்துழைப்பை பெறுவதற்கு கீழ் நிலை உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல்
- பாவிப்போர் வரவேற்பு பரிசோதனைக்கு {UAT } செயல்திறனுடன் இணைதல்
- உள்ளீடுகள் மற்றும் கட்டமைப்புகள் தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பதற்கும், குறைபாடுகளை நீக்கும் கட்டமைப்புகளை செயற்படுத்துவதற்கும், உதவி கோரிக்கைகளுக்கு பதில்குறி அளிப்பதற்கும் தொழில்நுட்ப பிரச்சனைகளை கையாள்வதற்கும் உதவி அளித்தல்.

**தேவையான தகைமைகள்**

- கணினி இயக்கத் திட்ட செயலாக்கம் (Programing) தொடர்பாக இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்துடன் கணினியியல் (Computer Science) தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைககழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல்.
- கணினி இயக்கத் திட்ட செயலாக்கம் (Programing) தொடர்பாக மூன்று ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட கணினியில் (Computer Science) டிப்ளோமா பெற்றிருத்தல். {குறைந்தபட்சம் ஓராண்டு காலப் பகுதியையேனும் கொண்ட டிப்ளோமாக இருத்தல் வேண்டும்}
- Java, dotNet, mobile application, C# மற்றும் Oracle SQL ஐ பயன்படுத்தி வங்கியொன்றிலோ அல்லது நிதி நிறுவனமொன்றிலோ மென்பொருள் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்துள்ளமை மேலதிக தகைமை ஆகும்.

**வயதெல்லை - 45 வயதிற்கு கீழே விரும்பத்தக்கது.**

**பதவிக்குரிய விதிகளும் நிபந்தனைகளும்**

இந்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் வேட்பாளர் முதலில் 02 ஆண்டு காலத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதோடு சிறந்த செயலாற்றுகையின் பேரில் தரம் IV பதவிக்கு அமர்த்தப்படுவர்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிக்கு கவர்ச்சிகரமான ஊதியங்கள் வழங்கப்படும்.

***தகவல் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஆய்வாளர்***

## INFORMATION SECURITY THREAT ANALYST

**பிரதான பொறுப்புகள்**

- பாதுகாப்பு ஆய்வு சாதனங்களின் மூலம் அச்சுறுத்தல்கள் மற்றும் ஆபத்துகள் தொடர்பான அறிக்கைகளை தயாரித்தல்.
- கூட்டாண்மை தகவல் ஆதனங்களின் பாதுகாப்பு நிர்வாகத்தினை தீவிரப்படுத்தல் மற்றும் மீளாய்வு செய்தல்.

- ஆபத்தான நிலைமைகளை அறிக்கையிடல் மற்றும் தீர்வுகளை முன்மொழிதல் மற்றும் தொடர் பாதுகாப்பு பிரச்சனைகளை கையாளுதல்
- காலத்துக்கேற்ப இணையவழி பாதுகாப்பு ஆற்றல்களை விருத்தி செய்வதற்கு உதவி அளித்தல்.
- வருடாந்த இடர் மற்றும் பரிசோதனை தேவைகளுக்கு உதவி அளித்தல்
- பல்வேறு கைத்தொழில்கள் மற்றும் விஷேட குழுக்களினால் ஏற்படக்கூடிய சைபர் அச்சுறுத்தல்கள் தொடர்பான புலனாய்வு தகவல்கள் தொடர்பாக தேவையான முன் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- வங்கித் தகவல் கட்டமைப்புகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், தகவல்களின் பாதுகாப்பு தொடர்பான சம்பவங்களின் போது உடன் பதில் குறி மற்றும் தானியக்க திட்டங்கள் ஊடாக ஏற்படக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களை அடையாளங் காண்பதற்கும், நிர்வகிப்பதற்கும் மற்றும் தடுப்பதற்கும் உதவி அளித்தல்.

**தேவையான தகைமைகள்**

- தகவல் பாதுகாப்பு அல்லது சைபர் பாதுகாப்பு தொடர்பாக (Information Security/Cyber Security) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல்
- Certified Ethical Hacker (CEH) போன்ற துறை சார்ந்த பாதுகாப்பு தொழில் தகைமைகளை பெற்றிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- இணையான பதவியொன்றில் 5 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்தை கொண்டிருத்தல்
- இடர் முகாமைத்துவம் (Vulnerability Management) மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் தொடர்பான அறிவை கொண்டிருத்தல்.
- சிறந்த ஆய்வு மற்றும் குறைபாடுகளை நீக்கும் ஆற்றலை கொண்டிருத்தல்.

**வயதெல்லை** - 45 **வயதிற்கு கீழே விரும்பத்தக்கது.**

**பதவிக்குரிய விதிகளும் நிபந்தனைகளும்**

இந்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் வேட்பாளர் முதலில் 02 ஆண்டு காலத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதோடு சிறந்த செயலாற்றுகையின் பேரில் தரம் III(2) பதவிக்கு அமர்த்தப்படுவர்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிக்கு கவர்ச்சிகரமான ஊதியங்கள் வழங்கப்படும்.

## மென்பொருள் பொறியியலாளர்
## SOFTWARE ENGINEER

**பிரதான பொறுப்புகள்**:

- பயன்படுத்துவோர் தேவைகளை பகுப்பாய்வு செய்தல்.
- குறியீடுகளை (Code) எழுதுதல் மற்றும் பரிசோதித்தல், தேவைக்கேற்ப அதனை திருத்துதல் மற்றும் மீள எழுதுவதுடன் தொடர்புடைய எந்தவொரு முறைமை ஆக்குநருடனும் தேவைக்கேற்ப தொடர்பாடலை மேற்கொள்ளுதல்
- புதிய மென்பொருள் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கணினி தொழிற்பாட்டு கட்டமைப்புகள் தொடர்பாக ஆய்வு செய்தல், அவற்றை உருவாக்குதல் மற்றும் எழுதுதல்
- மென்பொருள் மற்றும் வன்பொருள் செயற்பாட்டுக்கு தேவையான மென்பொருள் மற்றும் கட்டமைப்புகளை மதிப்பீடு செய்தல்
- புதுப்பிக்க வேண்டிய துறைகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் அடையாளங் காண்பதன் மூலம் தற்போதுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல்
- தற்பொழுது காணப்படும் மென்பொருள் உற்பத்திகளை ஒருங்கிணைத்து ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத கட்டங்களின் போது இணைந்து செயற்படுவதற்கு தேவையான வசதி அளித்தல்
- தொழில்நுட்ப விவரக் குறிப்புகளை உருவாக்குதல்
- தொழில்நுட்ப ஆக்குநர்களுடன் தொழிற்பாட்டு கோப்புகளை இயற்றுதல்
- மென்பொருள் குறைபாடுகளை மேற்பார்வை செய்து அவற்றை சரி செய்து கட்டமைப்புகளை பேணுதல்.
- தற்போதுள்ள தொழிற்பாட்டு கட்டமைப்புகளை இயற்றுதல் அல்லது அவற்றின் செயலாற்றுகை தொடர்பாக மென்பொருள் கட்டமைப்புகளை பராமரித்தல் மற்றும் அவற்றின் செயற்பாடு தொடர்பாக சேவை வழங்குநர்கள் மற்றும் உதவியாளர்களின் ஆலோசனைகளை பெறுதல்
- புதிய தொழில்நுட்பம் தொடர்பாக ஆராய்தல்
- மென்பொருள் தாபித்தல், கட்டமைப்பு, பகுப்பாய்வு மற்றும் குறைகளை நீக்குதல்
- அலுவலகங்களுடன் தொடர்புடைய தகவல்கள், தொழில்நுட்ப பிரச்சனைகள் தொடர்பாக ஆராய்தல் மற்றும் தேவைக்கேற்ப அவற்றை தீர்ப்பதற்கு ஒத்துழைப்பு அளித்தல்
- தேவையான சந்தர்ப்பங்களில் இறுதி பயன்படுத்துவோர் பயிற்சியை அளித்தல்
- தற்போதுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை பராமரித்தல் மற்றும் உதவிச் சேவைகளை வழங்குதல்
- பொறியியற் கோட்பாடுகள் முறைமையாக்க மொழி தொடர்பான அறிவை பயன்படுத்தி HDFC வங்கிக்கு மென்பொருள் தீர்வுகளை கட்டியெழுப்புதல்,

கணினி மென்பொருள் உள்ளீடுகளை உருவாக்குதல், அபிவிருத்தி செய்தல், பராமரித்தல், பரிசோதித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

**தகைமைகள்**

- கணினியியல் துறை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல் மற்றும் கணினி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக 05 ஆண்டு கால அனுபவத்தை கொண்டிருத்தல்.
  அல்லது
- கணினியியல் தொடர்பாக குறைந்தபட்சம் ஓராண்டுடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமாவுடன் கணினி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக 06 ஆண்டு கால அனுபவத்தை கொண்டிருத்தல்.
- Java, dotNet, Mobile Application, C# மற்றும் Oracle SQL's ஐ பயன்படுத்தி வங்கியியல்/ நிதி நிறுவனமொன்றில் மென்பொருள் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்துள்ளமை மேலதிக தகைமையாக கருதப்படும்.

**வயதெல்லை : 35 வயதை விட குறைவாக இருத்தல் வேண்டும்.**

**பதவிக்குரிய விதிகளும் நிபந்தனைகளும்**

இந்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் வேட்பாளர் முதலில் 02 ஆண்டு காலத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதோடு சிறந்த செயலாற்றுகையின் பேரில் தரம் III(2) பதவிக்கு அமர்த்தப்படுவர்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிக்கு கவர்ச்சிகரமான ஊதியங்கள் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் செயன்முறை**

மின்னஞ்சலின் விடய வரிசையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 29.05.2024 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் careers@hdfc.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் விபரங்களுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு கோரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவத்தை கொண்டிராத நபர்களுக்கு இந்த பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.
ஏற்புடைய தகைமைகளை பூர்த்தி செய்யாத நபர்களின் விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைத்த விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.
நேர்முகப் பரீட்சையின் போது ஏற்புடைய கோப்புகளின் மூலப் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு தவறும் விண்ணப்பதாரிகள் எக் காரணத்தினாலும் மேற்படி பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.
எந்தவொரு அழுத்தம் பிரயோகித்தலும் இப் பதவிக்கான தகைமை இழப்பாக கருதப்படும்.

ஆட்சேர்ப்புகளை பிற்போடுவதற்கான அல்லது ரத்துச் செய்வதற்கான உரிமை HDFC வங்கிக்கு உண்டு. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆட்சேர்ப்பு செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள்.


**உதவிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்**

HDFC **வங்கி,**

**த.பெ. இல** 2085,

**சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,**

**கொழும்பு** 02

**தொலைபேசி இல** - 0112 356800 - **இணைய தள முகவரி** : www.hdfc.lk